# வானவில்

VAANAVIL
ISSUE – 24 DECEMBER 2012

இதழ் - 24 மார்கழி 2012


# நுகர்வுக் கலாச்சாரத்தால் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களும் சமூகச் சீர்கேடுகளும்!




இலங்கைத் தமிழ் மக்களின் 'இதய பூமி' என யாழ்.மையவாதிகளாலும் (உயர்சாதி மேட்டுக் குழாமினர்), தமிழ் தேசியவாதிகளாலும், புலம்பெயர் புலி ஆதரவாளர்களாலும் பெருமையுடன் அழைக்கப்பட்டு வரும் யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்களும், சமூகச் சீர்கேடுகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தினமும் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

இந்தக் குற்றச் செயல்களும், சீர்கேடுகளும் பலவகைப்பட்டன.

நேரடியாக வீடுகளில் புகுந்து கொள்ளை அடிப்பது, தனியாகச் செல்லும் பெண்களிடம் நகைகளைப் பலவந்தமாக அபகரித்துச் செல்வது, கோவில்கள், பொது நிறுவனங்களில் புகுந்து கொள்ளையிடுவது என்பவை ஒரு ரகம். இவைகள் அநேகமாக ஆயுத முனைகளில் நடப்பவை.

இன்னொரு வகை ஏமாற்றிப் பணம் பறிப்பது. வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி இலட்சக் கணக்கில் பணம் கறப்பது, உத்தியோகம் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் பெறுவது, வங்கிகளில் நிதி நிறுவனங்களில் பெருந்தொகையான பணம் கடனாகப் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் வாங்குவது, மதுபான லைசென்ஸ் போன்ற அரச அனுமதிகள் பெற்றுத் தருவதாகச் சொல்லி பணம் கறப்பது, அடையாள அட்டை, கடவுச் சீட்டு போன்ற அத்தியாசிய ஆவணங்களைக் குறுக்கு வழியில் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் வசூலிப்பது, வெளிநாட்டிலிருந்து அல்லது கொழும்பில் இருந்து வரும் உறவினர்களின் நண்பர்களாக நடித்து வீடுகளில் தங்கி களவெடுத்துச் செல்வது போன்ற பலவகை மோசடிகளும் நடைபெறுகின்றன.

இதுதவிர, பாலியல் வன்செயல்கள், சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம், ஆயுதங்களால் தாக்குவது, அடிதடி, வீதிகளில் செல்லும் பெண்கள் மீது வாய்வழி பாலியல் தொந்தரவுகள் செய்வது, ஆபாசப் படங்களை குழுக்களாகச் சேர்ந்து பார்ப்பது, இளம் பெண்களைப் பலவந்தமாகக் கடத்திச் செல்வது, பாலியல் வல்லுறவின் பின் சிறுமிகளையும், இளம் பெண்களையும் கொலை செய்வது, திட்டமிட்ட கொலைகள், காணி – வீடு சம்பந்தமான சொத்துத் தகராறுகள், கள்ள உறுதிகள் தயாரித்து வெளிநாடுகளில் உள்ளவர்களின் காணிகளை விற்பனை செய்வது போன்ற சமூக விரோதச் செயல்களும் நடந்த வண்ணம் உள்ளன.

இவ்வகையான செயற்பாடுகள் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் நடைபெறாமல் இல்லை. குறிப்பாக 1977இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கையின் காரணமாகவே, இவ்வாறான

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க…

# ஆட்சி மாற்றத்தை வேண்டும் தமிழ் தேசியவாதிகள்

ஒரு நாட்டில் ஆட்சி மாற்றம் நிகழ வேண்டும் என்ற கோரிக்கை அந்த நாட்டு மக்களிடமிருந்துதான் முதலில் வரவேண்டும். கட்சி சார்பற்ற நடுநிலை ஊடகங்கள் என்று சொல்லிக்கொள்பவை ஆட்சியாளர்கள் பற்றிய மக்களின் அதிருப்தியான எண்ணங்களை பிரதிபலிக்கலாம். முதலாளித்துவ ஜனநாயக அமைப்பை கொண்டுள்ள நாடுகளில் தேர்தல் மூலம் காலத்துக்காலம் ஆட்சி மாற்றத்தை மக்கள் ஏற்படுத்துவார்கள். தேர்தல் மூலமாக இல்லாமல், சதிப்புரட்சியில் ஆட்சிக்கு வந்து, இராணுவத்தினதும் அந்நிய சக்திகளின் உதவியுடன் தேர்தல்கள் எதுவும் நடத்தாது அல்லது தேர்தல்களில் மோசடி செய்து ஆட்சி செலுத்தும் சர்வாதிகாரிகளை, மக்கள் வீதிக்கு இறங்கி போராடுவதின் மூலமாகவே அகற்ற முடியும். தேர்தல்முறை மூலமாகவும் மக்கள் வீதியில் இறங்கி போராடியும், மீண்டும் மீண்டும் முதலாளித்துவ ஆட்சியாளர்களே தவிர்க்கமுடியாமல் மக்களின் தெரிவாக இருப்பினும், ஏதோ உலகெங்கிலுமுள்ள பெரும்பாலான முதலாளித்துவ ஜனநாயக நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இலங்கையிலிருந்தும் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் வெளியாகும் பெரும்பாலான தமிழ், ஆங்கில தினசரி மற்றும் வாராந்த, மாதாந்த பத்திரிகைகளிலிருந்து இணையத்தளங்கள்வரை, இன்றுள்ள இலங்கை அரசை மாற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டை பகிரங்கமாக முன்னிறுத்தியே செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இந்த ஊடகங்கள் எப்போதுமே தீவிர தமிழ் தேசியவாத நிலைப்பாடும் கொண்டவைகள். தற்போது அதிகாரத்திலுள்ள ஐக்கிய சுதந்திர மக்கள் கூட்டமைப்பை எப்படியாவது அகற்றி ஐக்கிய தேசியக்கட்சியை மீண்டும் ஆட்சி பீடத்தில் ஏற்ற வேண்டுமென்ற நோக்கங் கொண்டுள்ள அந்நிய சக்திகளின் நேரடி, மறைமுக ஆதரவும் இந்த ஊடகங்களுக்கு உண்டு.

ஆனால் தென்னிலங்கையை தளமாகக் கொண்ட நடுநிலை சிங்கள, ஆங்கில ஊடகங்கள் இலங்கையில் ஆட்சி மாற்றம் நிகழக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவோ அல்லது ஆட்சி மாற்றம் நிகழ வேண்டுமென்ற அடிப்படையிலோ செய்திகளை வெளியிடுவதில்லை. ஏனெனில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு தென்னிலங்கை மக்களின் உறுதியான ஆதரவினை இந்த ஊடகங்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளன.

இலங்கை நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையையும் பாராளுமன்ற ஆட்சி முறையையும் இணைத்த அரசியலமைப்பை கொண்ட ஒரு நாடு. தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை சேர்ந்த ஒருவரே ஜனாதிபதியாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிடமே பாராளுமன்ற பெரும்பான்மையும் உள்ளது. கடைசியாக இலங்கையில் 2010 இல் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் நடாத்தப்பட்டதால் 2016 ஆம் ஆண்டிலேயே அடுத்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தலுக்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே ஜனநாயக ரீதியாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு குறைந்தது இன்னமும் 3 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

இந்த நீண்ட 3 ஆண்டுகள்வரை காத்திருந்தும் தேர்தல் பலப்பரீட்சையில் இப்போது ஆட்சி அதிகாரத்திலுள்ளவர்களை வெல்ல முடியாது என்று நம்புபவர்களே இலங்கையில் ஆட்சி மாற்றத்திற்கு முன்னின்று வேலை செய்கிறார்கள். இலங்கையில் இன்று ஐக்கிய தேசியக்கட்சி ஒரு பலமான கட்சியாக இல்லாதிருப்பதும் தேர்தலில் மக்களை வசீகரிக்கக்கூடிய தலைவர்களென எவருமே இல்லையென்பதாலுமே, இவர்கள் தேர்தல் மூலமான ஆட்சிமாற்றத்தில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள்.

தற்போது ஆட்சியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தலைமையிலான அரசு 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி புலிகளை முற்று முழுதாக தோற்கடித்ததே, தற்போதைய அரசுக்கும் தமிழ் தேசியவாதிகளுக்குமிடையிலான பிணக்கு. இதனால்தான் இந்த அரசு மீது போர்க்குற்றம் சுமத்தி சர்வதேச விசாரணை வேண்டுமென்று பிரச்சாரம் செய்து திரிகிறார்கள். புலிகளை தோற்கடித்த பின்னரும் தமிழர்கள் இனரீதியான ஒடுக்கு முறைக்கு உள்ளாகிறார்கள், மக்களின் நிலங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளது போன்ற பிரச்சாரங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த பிரச்சாரங்களில் உண்மைகள் இருப்பினும், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் இந்த நிலைமைகளில் மாற்றம் எதுவும் உடனடியாக ஏற்படாது.

வடக்குக் கிழக்கு அன்றாட பாதுகாப்பு கடமைகளிலும் சிவில் நிர்வாகங்களிலும் இராணுவ பிரசன்னம் இருக்கின்றது. யுத்தம் முடிந்து மூன்றரை வருடங்களே ஆகியிருப்பதால் இராணுவத்தின் தலையீடு தவிர்க்க முடியாதென அரசு நீண்ட காலம் கூறிக்கொணடிருக்க முடியாது. மேலும் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியையும் பாராளுமன்ற பெருபான்மையையும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு கொண்டிருப்பதால், இலங்கையில் தாங்கள் நினைத்ததை எதையும் செய்யலாம் என்ற எண்ணமும் தற்போதைய அரசுக்கு இருக்கக்கூடாது.
*

---

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com




**வானவில் 22வது இதழின் தொடர்ச்சி...**

பலர் இறக்கவும் நேர்ந்தது. ஐ.தே.க அரசின் முதல் மூன்று வருட யுத்தத்தின் காரணமாக, மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து யூனிசெவ் மற்றும் யாழ் சுகவாழ்வு நிறுவனங்களின் அறிக்கையில் பின்வரும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- நூற்றுக்கணக்கான பாடசாலைக் கட்டடங்களும், வணக்கஸ்தலங்களும் குண்டு வீசித் தகர்த்தழிக்கப்பட்டன.
- இக்காலகட்டத்தில் வடக்கிலிருந்த 1,67,073 சிறுவர்களில், 2,123 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.
- ஊனமுற்ற சிறுவர்கள் 1,067.
- தாய் தந்தையை இழந்த சிறுவர்கள் 485.
- பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள்17,500.

### தென் இலங்கையில்

1989களின் பிற்பகுதியில் தென்னிலங்கையில் ஜே.வி.பி நடாத்திய இரண்டாவது கிளர்ச்சியின் போது 60,000 வரையிலான சிங்கள இளைஞர்களை வீதியில் ரயர் போட்டு எரித்தும், சித்திரவதை செய்தும் ஆர்.பிரேமதாசவின் ஐ.தே.க அரசாங்கம் படுகொலை செய்தது. அத்துடன், பட்டலந்த என்ற இடத்திலிருந்த சித்திரவதை முகாமிற்கு நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதை, ஐ.தே.கவின் முக்கிய தலைவர் ஒருவர் சாய்வு நாற்காலியில் இருந்து கொண்டு விஸ்கி அருந்தியபடி பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட மூர்க்கத்தனமான. வக்கிரமான தலைவர்களைக் கொண்டதுதான் ஐக்கிய தேசியக் கட்சி.

தமிழ் மக்களின் பரம வைரிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன. ஆர்.பிரேமதாச. சிறில் மத்தியூ. அத்துலத் முதலி. ரஞ்சன் விஜயரத்ன, காமினி திசாநாயக்க போன்றவர்களின் வாரிசுகள்தான் இன்றைய ஐ.தே.கவின் தலைமையிலும் இருக்கின்றனர். தமிழர்களைப் பார்த்து “யுத்தம் என்றால் யுத்தம் சமாதானம் என்றால் சமாதானம்” என

அகங்காரத்தோடு சவால் விட்டதுமல்லாமல், ஹிட்லர் பாணியில் தமிழ் இன அழிப்பு யுத்தத்தையும் அவர்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசியல்

# இனப் பிரச்சினையைத் தமிழ் இன அழிப்பு யுத்தமாக மாற்றியது ஐக்கிய தேசியக் கட்சியே!

எமது நாட்டில் இனவாதத்திற்கு அடித்தளமிட்டுத் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டு வருகிறது ஐக்கிய தேசியக் கட்சி. 1977இல் அதிகாரத்திற்கு வந்த இலங்கையின் மிகவும் மோசமான பிற்போக்குவாதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம், இனப்பிரச்சினையை தமிழ் இன அழிப்பு யுத்தமாக மாற்றியது. அதைத் தொடர்ந்து தமிழ் மக்களின் மீதான நீண்டகால யுத்தத்தைத் தொடர்ச்சியாக நடாத்தியது ஐ.தே.க அரசுதான்.

தமிழ் மக்கள் மேல் ஐ.தே.க அரசு ஆரம்பித்த யுத்தத்தைத் தொடர்ந்து, வட பகுதி மீது அது விதித்த பொருளாதாரத் தடையால் உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், எரிபொருள் என்பவை இல்லாமையால், பல்லாயிரக்கணக்கான மக்கள் பட்டினி கிடந்து தவித்ததுடன், ஆயிரக்கணக்கானோர் நோய்வாய்ப்பட்டுப்

வாரிசும், உறவு முறையில் மருமகனுமானவர்தான், இன்றைய ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க. ஐ.தே.க, ஆரம்பம் முதல் எடுத்து வந்த தமிழின ஒழிப்பு நடவடிக்கையை, ரணில் தலைமையிலான இன்றைய அக்கட்சி தொடரும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

## இராணுவத்தை நவீனமயப்படுத்தும் ஐ.தே.கவின் திட்டம்

“நான் பதவிக்கு வந்த பின் இன்றுள்ள இராணுவத்துடன் மேலும் புதிய இராணுவ பிரிகேட்டுகளை உருவாக்குவேன்” என ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கூறியிருக்கிறார். “எங்களுடைய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டவுடனே, இன்றுள்ள பழைய இராணுவ தளபாடங்கள் அத்தனையையும் வீசி எறிந்துவிட்டு, புதிய நவீனமயப்படுத்தப்பட்ட ஆயுதங்களைக் கொள்வனவு செய்து எமது இராணுவத்தைப் பலப்படுத்துவோம்” என்று, ஹெல உருமய உறுப்பினராக இருந்த ஹேமகுமார நாணயக்கார கூறியுள்ளார். இவர் காலி மாவட்ட ஐ.தே.க அமைப்பாளராக இருந்ததுடன், கட்சியின் முக்கிய தலைவராகவும் இருந்தவர்.

இவர் கூறும் நவீனமயப்படுத்தப்பட்ட இராணுவம் யாருடன் போரிடுவதற்காக? கடந்த காலங்களைப் போல தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்குத்தானே? இப்படிப்பட்ட தமிழ் மக்கள் அழிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சிங்களப் பேரினவாத ஐ.தே.கவுடன்தான், தமிழ் தலைமைகள் தொடர்ச்சியாகக் கூட்டுச் சேர்ந்து செயல்பட்டு வந்ததுடன், இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையும் கூட்டுச் சேர்ந்து செயற்படுகின்றது.

தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ‘முடிசூடா மன்னன்’ ஜீ.ஜீ.பொன்னம்பலம், ‘அடங்காத் தமிழன்’ சி.சுந்தரலிங்கம், ‘ஈழத்துக் காந்தி’ எஸ்.ஜே.வி.செல்வாநாயகம், ‘தளபதி’ அ.அமிர்தலிங்கம், ‘தேசியத் தலைவர்’ வே.பிரபாகரன் போன்றவர்களிலிருந்து, இன்றைய தமிழரசுக்கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பனவற்றின் தலைவரான ஆர்.சம்பந்தன் வரை, அனைவருமே அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு விசுவாசமாகவும், சிங்களப் பேரினவாத - மக்கள் விரோத ஐ.தே.கவுக்கு நேச சக்தியாகவும் இருந்து செயற்பட்டு வந்துள்ளனர்.

அந்த வகையில்தான், 2012 மேதினத்தை படு பிற்போக்கான, தொழிலாளி வர்க்க விரோதியான, முதலாளி வர்க்கத்தின பாதுகாவலான ஐ.தே.கவுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் கொண்டாடியுள்ளது. தென்னிலங்கையில் செல்வாக்கிழந்து வரும் ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.கவுக்கு, தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவு திரட்டிக் கொடுப்பதற்காகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் ஐ.தே.கவுடன் இணைந்து மேதினத்தை நடாத்தியுள்ளது. அந்த மேதினக் கூட்டத்தில் தமிழர்களின் பாரம்பரியக் கொடியான நந்திக் கொடியையும், தமிழர்களின் ஏகப் பிரதிநிதி எனத் தம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்ட புலிகளின் புலிக் கொடியையும் புறக்கணித்துவிட்டு, அதுவரை காலமும் புறக்கணித்து வந்த சிங்கக் கொடியை ஏந்தி சம்பந்தன் தனது ஐ.தே.க விசுவாசத்தைக் காட்டியுள்ளார்.

## புரட்சிகர மேதினம்

2012 மேதினத்தை ஒன்று சேர்ந்து கொண்டாடிய இதே தொழிலாளி வர்க்க விரோத சக்திகள்தான், தாங்கள் அதிகாரத்தில் இருந்தபோது, தொழிலாளி வர்க்கம் மேதினத்தைக் கொண்டாட முடியாதவாறு சாதனை செய்தவர்கள். 1965இல் அமைந்த டட்லி சேனநாயக்கவின் ஐ.தே.க தலைமையிலான ஏழு கட்சி கூட்டாட்சியில், தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் இணைந்திருந்த போதுதான், அவர்களது அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் மேதினம் கொண்டாட முடியாதவாறு தடை செய்தது. ஆனால் அந்தத் தடையை தொழிலாளி வர்க்கத்தினதும், உழைக்கும் மக்களினதும் ஆதரவுடன் எமது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தகர்த்தெறிந்து, தடையை மீறி யாழ்ப்பாணத்தில் மேதின ஊர்வலத்தை நடாத்தியதுடன், யாழ்.முற்றவெளி மைதானத்தில் பிரமாண்டமான மேதினப் பொதுக் கூட்டத்தையும் நடாத்தியது.

அதே அரசாங்கம்தான் மீண்டுமொருமுறை 1969இல் மேதினமும் பௌத்த மக்களின் வெசாக் தினமும் ஒரே நாளில் வருகிறது எனக் காரணம் காட்டி, இலங்கை முழுவதிலும் மேதினத்தைத் தடை செய்தது. சிங்களப் பேரினவாத ஐ.தே.க அரசின் இந்த தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரான, பௌத்த மதத்தை முன்னிறுத்திய நடவடிக்கையை, அந்த அரசின் பங்காளிகளாக இருந்த இரண்டு தமிழ் இனவாதக் கட்சிகளான தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகள் முழு மனதுடன் ஆதரித்துச் செயற்பட்டன. அப்பொழுதும் எமது புரட்சிகர இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மாத்திரமே, தடையை மீறி கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் மேதின ஊர்வலங்களையும், கூட்டங்களையும் நடாத்தின.

இருந்தும் ஐ.தே.க - தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கூட்டரசாங்கம் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் புரட்சிகர மேதின நிகழ்வுகளில் பங்குபற்றிய தொழிலாளர்களையும், பொதுமக்களையும் பொலிசாரை ஏவி அடித்து நொருக்கியதுடன், பலரைக் கைது செய்து அவர்கள் மீது வழக்கும் தொடுத்தது.

## தமிழ்த் தலைமைகளின் துரோக நடவடிக்கைகள்

1. 1948ஆம் ஆண்டு டி.எஸ்.சேனநாயக்கவின் ஐ.தே.க அரசாங்கம் மலையக இந்திய வம்சாவழித் தமிழர்களின் வாக்குரிமையையும், பிரஜாவுரிமையையும் பறித்த போது, அந்த அரசில் மீன்பிடி அமைச்சராக இருந்த தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அதை ஆதரித்து

வாக்களித்து, மலையகத் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்தார்.

2. 1948 பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கைக்கு பிரித்தானிய முடியரசு சுதந்திரம் வழங்கியது. சுதந்திரம் வழங்குவதற்கு நிபந்தனையாக பிரித்தானியாவின் விமானப்படைத்தளம் கட்டுநாயக்காவிலும், கடற்படைத்தளம் திரிகோணமலையிலும் தொடர்ந்து இருப்பதற்கான பாதுகாப்பு, வெளிவிவகாரம் சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்றை, சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கவுடன் பிரித்தானிய அரசு செய்து கொண்டது.

ஆனால் 1956இல் பதவிக்கு வந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசு, இவ்விரு படைத் தளங்களையும், வெளிவிவகாரம் சம்பந்தமான பிரித்தானியாவின் ஒப்பந்தத்தையும் செயல் இழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. இச் சந்தர்ப்பத்தில் தமழிரசுக்கட்சித் தலைவர் 'ஈழத்துக் காந்தி' எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இப்படைத் தளங்களை அகற்ற வேண்டாம் என பிரித்தானிய அரசி எலிசபெத் அம்மையாருக்கு தந்தியடித்து, தனது ஏகாதிபத்திய விசுவாசத்தையும், தேசத் துரோகத்தையும் வெளிப்படுத்திக் கொண்டார். அதாவது, இந்தியாவின் அசல் காந்தி பிரித்தானிய ஏகாதிபத்தியத்தைப் பார்த்து "வெள்ளையனே வெளியேறு" எனக் கோசமிட, இந்த போலி ஈழத்துக் காந்தி, "வெள்ளையனே வெளியேறாதே" என வேண்டினார். ஆனால் அவரது எதிர்ப்புரட்சிகரச் செயல் இலங்கை மக்களால் முறியடிக்கப்பட்டது.

3. இலங்கையின் பிரதான துறைமுகமான கொழும்பு துறைமுகத்தை பண்டாரநாயக்க அரசு தேசியமயமாக்க நடவடிக்கை எடுத்த பொழுது, அதையும் தமிழரசுக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து எதிர்த்தது.

4. 50 ஏக்கர்களுக்கு மேலான நெற்காணிகளைச் சுவீகரித்து, அதை நிலமற்ற விவசாயிகளுக்குப் பங்கீட்டளிக்கும் 'நெற்காணி மசோதாவை' பண்டாரநாயக்க அரசின் அமைச்சர் பிலிப் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த போது, பெரும் நிலப்பிரபுக்களைப் பாதுகாக்கும் பொருட்டு அதையும் ஐ.தே.கவும் தமிழரசுக்கட்சியும் கூட்டுச் சேர்ந்து எதிர்த்தன.

5. பண்டாரநாயக்க 1957இல் ஏகாதிபத்திய சார்பு சக்திகளால் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட பின்னர், ஆட்சிக்கு வந்த அவரது மனைவி திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க, அந்நிய எண்ணெய்க் கம்பனிகளை நாட்டுடைமை ஆக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போது, அதையும் தமிழரசுக்கட்சி ஐ.தே.கவுடன் சேர்ந்து எதிர்த்தது.

6. அந்நியக் காப்புறுதி (இன்சூரன்ஸ்) நிறுவனங்களை தேசியமயமாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானம் கொண்டு வந்த பொழுது, அதையும் ஐ.தே.கவும் தமிழரசுக் கட்சியும் இணைந்து எதிர்த்தன.

7. வங்கிகளைத் தேசியமயமாக்கியதுடன், சாதாரண மக்களுக்கு உதவும் பொருட்டு 'மக்கள் வங்கி'களை அமைக்கும் மசோதாவை அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் ரி.பி.இலங்கரத்ன கொண்டு வந்த போது, அதையும் ஐ.தே.கவும் தமிழரசுக் கட்சியும் இணைந்து எதிர்த்தன. ஆனால் வேடிக்கை என்னவெனில், மட்டக்களப்பில் திறக்கப்பட்ட மக்கள் வங்கியில் முதலாவது ஆளாகக் கடன் எடுத்தவர் தமிழரசுக் கட்சியின் ஒரு பாராளுமன்ற உறுப்பனர் என்ற விடயம் பின்னர் அம்பலத்துக்கு வந்து, மக்கள் மத்தியில் அது கேலியாகப் பேசப்பட்டது.

8. 1960 யூலையில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தல் பிரச்சாரத்தின் போது, ஐ.தே.க சிறீலங்கா சுதந்திரக் கட்சியைத் தோற்கடிப்பதற்காக மிகவும் மோசமான தமிழின விரோதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. அதாவது, சிறீலங்கா சுதந்திரக் கட்சி தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து நாட்டை இரண்டாகப் பிரித்து, நாட்டின் வட பகுதியைத் தமிழருக்குத் தாரைவார்க்கப் போகின்றது என பிரச்சாரம் செய்தது. ஐ.தே.கவின் இந்த விசமப் பிரச்சாரத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சி எவ்வித எதிர்ப் பிரச்சாரத்தையும் மேற்கொள்ளவில்லை. ஏனெனில் ஐ.தே.க இந்தப் பிரச்சாரத்தின் மூலம் தேர்தலில் வெற்றி பெறட்டும் எனத் தமிழரசுக் கட்சி எதிர்பார்த்தது. ஆனால் சிங்கள மக்கள் அப்பிரச்சாரத்துக்கு எடுபடாமல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைத் தேர்தலில் வெற்றி பெற வைத்தனர்.

9. சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் காலத்தில்தான், முதன்முதலாக நாடாளுன்றத்தில் சிம்மாசனப் பிரசங்கம் (Throne Speech) தமிழிலும் வாசிக்கப்பட்டது. அதுமாத்திரமல்லாமல், நாடாளுமன்றத்தில் தமிழிலும் விவாதம் நடாத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதுடன், தமிழில் சமகால மொழிபெயர்ப்பு வசதியும்

செய்யப்பட்டது. இக்காலகட்டத்தில் அரசாங்கம் தமிழரசுக் கட்சியுடன் மொழிப் பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தைகளையும் நடாத்தியது.

10. எல்லாவற்றுக்கும் மேலாக தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதும் இக்காலகட்டத்தில்தான்.

11. இக்காலகட்டத்தில் அரசாங்கம் பாடசாலைகளை அரசுடமையாக்கும் முயற்சிகளை மேற்கொண்டது. ஏனெனில் இலங்கையின் பிரபலமான பாடசாலைகள் யாவும் அந்நிய மிசனரிகளினதும், தனிப்பட்ட முதலாளிகளினதும் கைகளில் இருந்தன. அதனால் பிள்ளைகள் எல்லோருக்கும் சம வாய்ப்புடன் கிடைக்க வேண்டிய கல்வியை அவர்கள் பெற முடியாத நிலை இருந்தது.

ஆனால் இந்த மக்கள் சார்பான, முற்போக்கான நடவடிக்கையை எதிர்ப்பதற்கு, ஐ.தே.க, தமிழரசுக் கட்சி, அந்நிய மிசனரிகள் கூட்டுச்சேர ஆரம்பித்தனர்.

1960 நொவெம்பர் 12இல் தமிழரசுக் கட்சியின் நிர்வாகக் குழு கூடியது. இக்கூட்டத்தில் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையையும், பாடசாலைகளை அரசுடமையாக்கும் அரசின் முடிவையும் எதிர்த்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1960 நொவெம்பர் 12ஆம் திகதி பாடசாலைகளை அரசுடமையாக்கும் மசோதாவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தது. ஆனால் அன்றுவரை அரசாங்கம் புதிய மொழிக் கொள்கை எதையும் சமர்ப்பிப்பதாக எவ்வித அறிவித்தலும் கொடுத்திருக்கவில்லை. ஆனால் தமிழரசுக் கட்சி, அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை எதிர்ப்பதாகச் சாட்டுக் கூறிக் கொண்டு, ஐ.தே.கவுடன் சேர்ந்து பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தது.

இக்காலகட்டத்தில், கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகம் அமைந்திருக்கும் வத்திக்கானின் தென் கிழக்காசியப் பிரதிநிதி அக்காசியன் என்பவர், 1960 டிசம்பர் முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். இந்தியாவின் கேரள மாநிலத்தில் (இந்தியாவிலேயே முதன்முதலாக கேரள மாநிலத்தில்தான், கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலில் வெற்றி பெற்று, தோழர் ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாத் தலைமையிலான முதலாவது காங்கிரசல்லாத அரசாங்கம் அமைந்தது என்பதும், பின்னர் அவ்வரசாங்கத்தைப் பொய்க் குற்றச்சாட்டுகளைக் கூறி நேருவின் அரசாங்கம் கலைத்துவிட்டு, அங்கு ஜனாதபதி ஆட்சியைக் கொண்டு வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது) பாடசாலைகள் தேசியமயமாக்கப்படுவதை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தைப் பற்றிப் பல பிரமுகர்களுக்கு விளக்குவதுதான், அவரது விஜயத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. அவர் சில அரசியல்வாதிகளையும், பிரமுகர்களையும் சந்தித்து உரையாடினார். சிலரை இரகசியமாகவும் சந்தித்தார்.

இப்படி தமிழ் மக்களுக்கு எதிராகப் பல்வேறு காலகட்டங்களில் இன வன்செயல்கள் உட்பட பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்ட ஐ.தே.கவுடன் சேர்ந்துதான், தமிழ் தேசியக் கூட்டமைப்பு இவ்வருட மேதினத்தை, அதுவும் யாழ்ப்பாணத்தில் நடாத்தியுள்ளது. இதிலிருந்து ஒன்று தெளிவாகத் தெரிகிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் இன, மொழி உரிமைகள் குறித்து உரக்கப் பேசினாலும், அதைவிட ஏகாதிபத்திய சார்பு, பிற்போக்கு ஐ.தே.கவுடன் உள்ள வர்க்க உறவுதான் அவர்களுக்கு மேலானது.

புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் இறுதி யுத்த நடவடிக்கையின் போது, போரின் இடையில் சிக்கி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்தனர். இந்த உயிரிழப்புகளுக்கு அரச படைகளும் முக்கியமான காரணகர்த்தாக்கள் ஆவர். அதாவது அப்பொழுது நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா அதற்குப் பொறுப்பானவர். இந்தப் பொன்சேகா கனடிய ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தமிழர்களை 'வந்தேறு குடிகள்' என்று வர்ணித்ததுடன், அவர்கள் வேண்டுமானால் இலங்கையில் வாழ்ந்துவிட்டுப் போகலாம், ஆனால் உரிமைகள் எதனையும் கோரக்கூடாது என்றும்,பகிரங்கமாகத் தனது பேரினவாதக் கொள்கையை வெளிப்படுத்தியவர்.

அத்தகைய சரத் பொன்சேகா கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது, அவரை ஐ.தே.கவும், ஜே.வி.பியும் முழுமனதுடன் ஆதரித்தன. சிங்களப் பேரினவாதக் கட்சிகளான அவைகள் அவரை ஆதரித்ததில் வியப்பதற்கு ஏதுமில்லை. ஆனால் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதுதான் தமது உயிர்மூச்சு என்று பிரகடனம் செய்து வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்ததை என்னவென்று சொல்ல? தமிழர் மீதான விசுவாசம் என்று சொல்வதா? அல்லது வர்க்க விசுவாசம் என்று சொல்வதா?

இன்றும்கூட, தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகளிலாகட்டும், நாட்டின் பிரதான பிரச்சினைகளிலாகட்டும், முற்போக்கு சக்திகளுடன் ஒருங்கிணைந்து போராடுவதற்குப் பதிலாக, பிற்போக்கு, பேரினவாத ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்து செயற்படுவதிலேயே நாட்டமாக இருக்கிறது. இந்த நிலை மாறாவரை தமிழ் மக்களுக்கு எவ்விதமான விமோசனமும் கிடைக்கப் போவதில்லை. இதை விளங்கிக் கொள்வதில்தான், தமிழ் மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது.

**- நீர்வை பொன்னையன்**

(தோழர் நீர்வை பொன்னையன், இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். கலை - இலக்கியம் மட்டுமின்றி, இடதுசாரி அரசியல், தொழிற்சங்கத் துறைகளிலும் களத்தில் நின்று செயற்பட்டவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க முக்கிய நிர்வாகிகளில் ஒருவரான அவர், அந்த அமைப்பு செயல் இழந்து போன பின்பு, அதன் நீட்சியாக உருவாகிச் செயற்பட்டு வரும் 'இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்ற'த்தின் இணைப்பாளராகத் தனது 82ஆவது அகவையிலும் துடிப்புடன் செயற்பட்டு வருகிறார்.

அந்த மன்றம் தொடர்ந்து வெளியிட்டு வரும் 'சிந்தனை வெளியீடு' 07இல் இருந்து இக்கட்டுரைத் தொடர் பிரசுரிக்கப்பட்டு வந்தது. இது அக்கட்டுரையின் இறுதிப் பகுதியாகும். இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தையும், தோழர் நீர்வை பொன்னையனையும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். kailashpath@yahoo.com )

முற்றும்

## எஸ்எம்எஸ்ஸுக்கு வயது 20

எஸ்.எம்.எஸ். (**Short Message Service**) எனப்படும் குறுந்தகவல் சேவைக்கு 20 வயது நிறைவடைந்துள்ளது..

கடந்த 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் தேதிதான் முதல் எஸ்எம்எஸ் பிறந்தது. இங்கிலாந்தைச் சேர்ந்த என்ஜினியர் நீல் பாப்வொர்த் (22) என்பவர் தனது ஆர்பிடெல் 901 செல்போனில் இருந்து வோடபோன் நெட்வொர்க் மூலம் மெர்ரி கிறிஸ்துமஸ் என்று எஸ்.எம்.எஸ். அனுப்பினார். இதுதான் உலகின் முதல் எஸ்.எம்.எஸ்.

ஆனால் வர்த்தக ரீதியாக எஸ்.எம்.எஸ். சேவை 1993ம் ஆண்டு ஸ்வீடனில் தொடங்கியது. அதன் பிறகு அதே ஆண்டில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்திலும் எஸ்.எம்.எஸ். சேவை துவங்கியது.

தொடர்ந்து 1994ம் ஆண்டு எஸ்.எம்.எஸ். சேவையுடன் கூடிய நோக்கியா 2110 போனை நோக்கியா நிறுவனம் அறிமுகப்படுத்தியது.

தற்போது ஒவ்வொரு நொடிக்கும் 2 இலட்சத்திற்கும் அதிகமான எஸ்.எம்.எஸ்.கள் அனுப்பப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் தற்போது இன்டர்நெட் வசதியுடன் கூடிய ஸ்மார்ட்போன்கள் வந்த பிறகு எஸ்.எம்.எஸ். அனுப்புவோரின் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளது.

பலர் பிளாக்பெர்ரி மெசஞ்சர், வாட்ஸ்ஆப் மற்றும் கூகுள் டாக்கை பயன்படுத்த அதிகம் விரும்புகின்றனர்.

ஆனால் கல்லூரி மாணவ-மாணவிகள் எஸ்.எம்.எஸ். சேவையைத்தான் அதிகம் பயன்படுத்துகின்றனர்.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு 'இந்து' ராம் புத்திமதி!

"இலங்கையில் இன்று பதவியில் இருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் போன்ற ஒரு பலம் வாய்ந்த அரசாங்கம் இதற்கு முதல் இருந்தது இல்லை. எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசுக்கு பூரண ஆதரவு வழங்குவதின் மூலம் இனப் பிரச்சினைக்கு ஒரு இறுதித் தீர்வைக் காணபதற்கு உதவ வேண்டும்"



இவ்வாறு கூறியிருக்கிறார் இந்தியாவின் பிரபலமான 'த இந்து' ஆங்கில நாளிதழின் முன்னாள் ஆசிரியரும், உலகின் பிரசித்தி பெற்ற பத்திரிகையாளர்களில் ஒருவருமான என்.ராம். இந்தியாவிலுள்ள ஆசிய பத்திரிகையாளர்களுக்கான பயிற்சி நிலையத்துக்கு விஜயம் செய்த இலங்கைப் பத்திரிகையாளர்கள் குழுவொன்றுடனான உரையாடலின் போதே திரு.ராம் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அவர் அங்கு கூறுகையில்,

"கம்போடியாவின் பொல்பொட் குழுவினரின் பாணியில் புலிகள் செயற்பட்ட போது, இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதுவும் கூறாது மௌனம் சாதித்து வந்ததுடன், புலிகள் சொன்னதையே செய்தும் வந்தனர்.

1991இல் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை புலிகள் கொலை செய்ததின் மூலம் அவர்களுக்கு இந்தியாவில் இருந்து வந்த ஆதரவையும் அனுதாபத்தையும் முற்றாக இழந்தனர். இந்திய மக்கள் அவர்களை விட்டுத் தூர விலகிக் கொண்டனர்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என அண்மையில் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். இது அரசியல் உள் நோக்கத்துடனான ஒரு அறிக்கையாகும். இந்த அறிக்கையை தமிழ் நாட்டிலுள்ள புத்திசாலித்தனமான எந்த அரசியல்வாதியும் கணக்கில் எடுக்கமாட்டார்கள்.

இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களின் எதிரிகள் புலம்பெயர் தமிழ்த் தலைவர்களே" என்றும் குறிப்பிட்டார்.
*




### *பர்மா - ஒரு முற்குறிப்பு:*

நீண்ட காலம் இராணுவ ஆட்சி நடைபெற்று வரும் பர்மாவில் அண்மைக் காலமாக ஜனநாயகத்தை நோக்கிய சில மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அதற்கான பிரதான காரணம் பர்மிய மக்கள் ஜனநாயக உரிமைகளுக்காக நீண்ட காலமாக நடாத்தி வந்த போராட்டங்கள் என்ற போதிலும், வெளிநாட்டு நிர்ப்பந்தங்களும் இன்னொரு காரணமாகும்.

இதைத் தொடர்ந்து, இந்த மாற்றங்களுக்கான காரணகர்த்தாக்கள் தாம்தான் என உரிமை கோரும் மேற்கு முதலாளித்துவ உலகின் தலைவர்கள் – அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமா உட்பட – ஒருவர் பின் ஒருவராக அங்கு 'படையெடுத்து' வருகின்றனர். அவர்களின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமான எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகியை கட்டித் தழுவி மகிழ்ச்சியும் வெளிப்படுத்துகின்றனர்.

ஆனால் மறுபக்கத்தில் இந்த 'ஜனநாயக மீட்பர்களோ', பர்மாவின் 'சமாதான தேவதை'யும் சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றவருமான ஆங் சான் சூகியோ, பர்மாவின் பெரும்பான்மை பௌத்த மேலாண்மைவாதிகள் அங்குள்ள ரொங்கியா முஸ்லீம் சிறுபான்மையினருக்கு எதிராக நிகழ்த்தி வரும் மதவாத வன்முறைகளைக் கண்டும் காணாதவர்களாக இருக்கின்றனர். அதுமட்டுமின்றி, உலக பௌத்தர்களின் ஆன்மீகத் தலைவர் என வர்ணிக்கப்படுபவரும், மேற்குலகின் மிகுந்த நேசத்துக்குரியவருமான தீபெத்திய தலாய்லாமாவும் அங்கு நடைபெறும் பௌத்த மத வெறியர்களின் நடவடிக்கைகள் குறித்து மௌனம் சாதித்து வருகின்றார்.

இவற்றின் பின்னணியில், அருகே பிரசுரிக்கப்பட்டுள்ள 'ரொறன்ரோ ஸ்ரார்' கட்டுரை, பர்மா மீதான மேற்குலகின் திடீர் கரிசனைக்கு என்ன காரணம் என்பதை விளங்கிக் கொள்ள ஓரளவு உதவிகரமாக இருக்கும் என நம்புகிறோம்.

# கனடா பர்மாவுடன் நெருக்கம் கொள்ள முனைவது ஏன்?

**தோமஸ் வோல்க்கொம் – 'ரொறன்ரோ ஸ்ரார்'**
(Thomas Walkom – Toronto Star)

கனடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயர்ட் (John Baird) கடந்த மாதம் (மார்ச், 2012 – மொர்) மிகுந்த எதிர்பார்ப்பும் பிரயத்தனமும் மிக்க பர்மிய பயணத்தை ஏன் மேற்கொண்டார் என்பதை நாம் எப்படி அறிய முடியும்? இந்த தென் கிழக்காசிய நாட்டிற்கான பெயிர்ட்டின் விஜயத்திற்கு, அங்கு மனித உரிமைகளை விவாதிப்பதற்காகவும், அத்துடன் குறிப்பாக அங்குள்ள இராணுவ சர்வாதிகாரம், கருத்து முரண்பாடுடனுள்ள தலைவர் ஆங் சான் சூயியையும் அவரது ஆதரவாளர்களையும் பர்மாவின் இராணுவ ஆதிக்கத்திலுள்ள சட்டசபைத் தேர்தல்களில் பங்கெடுக்க அனுமதித்ததைப் பாராட்டுவதற்காகவும் எனத் தோற்றப்பாடு காட்டப்பட்டது.

ஆனால் சமீபத்தில் உலகத் தலைநகரங்களில் இருந்து கசியும் தகவல்களின்படி, இதற்கான உண்மையான காரணம் வழமையான ஒன்றுதான் அதாவது அங்குள்ள வளங்கள்தான்.

வளங்கள் மிக்க பர்மா தற்பொழுது மேற்கு நாடுகளின் கடுமையான பொருளாதாரத் தடைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பெரும் நிறுவனங்கள், குறிப்பாக எண்ணெய் நிறுவனங்கள் இந்தத் தடையை நீக்கும்படி கடுமையான பிரயத்தனங்களையும் பிரச்சாரங்களையும் மேற்கொண்டு வருகின்றன.

இதற்கமைவான சூழ்நிலை உதயமாகும் போது, தனது வர்த்தக நிறுவனங்களையும் அதன் மத்தியிலும் முன்னணியிலும் கொண்டு போகலாம் என கனடா நம்புகிறது.

அமெரிக்கா ஏற்கெனவே பர்மாவுக்கெதிரான சில தடைகளை நீக்கியுள்ளது. 'பினான்சியல் ரைம்ஸ்' (Financial Times) பத்திரிகை மேலும் பல தடைகள் விரைவில் தளர்த்தப்படலாம் என ஆருடம் கூறுகின்றது.

ரொய்ட்ரேர்ஸ் (Reuters) செய்தி நிறுவன அறிக்கைகளின்படி, ஐரோப்பிய பகாசுர எண்ணெய் நிறுவனங்களான Shell, BP, Total என்பன அமெரிக்காவைப் பின்தள்ளிவிட்டு முந்தும்படி தமது அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. இந்த மாதப் பிற்பகுதியில் ஐரோப்பிய யூனியன்

அதிகாரிகள் பர்மா மீதான தமது தடைகளை மீளாய்வு செய்த பின்னர், அவர்கள் மேலும் கூடுதலாகச் செய்யக்கூடும்.

'பர்மாவின் நண்பர்கள்' போன்ற ஜனநாயக ஆதரவுக் குழுக்களின் பிரச்சார முயற்சிகள்தான் பர்மா மீது மேற்குலகின் தடைகள் இவ்வளவு காலமும் நீடித்ததிற்கு ஒரு பங்களிப்பை வழங்கின எனலாம். பொதுவாக அரசாங்கங்கள் தமது நாட்டின் வர்த்தக நிறுவனங்கள் சர்வாதிகார சக்திகளுடன் வியாபாரம் செய்வது சம்பந்தமாக அக்கறைப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக ஒட்டாவா இன்று சீனாவுடன் உறவு கொள்ளத் துடிப்பதைக் கூறலாம்.

ஆனால் பர்மாவின் நிலை விசேடமானது. 1962இல் இராணுவ ஜெனரல்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து, இராணுவ அரசாங்கம், அது எந்த வடிவத்தில் இருந்தாலும், எதிர்ப்பாளர்கள் மற்றும் சிறுபான்மை இனங்கள் மீதான கடுமையான போக்குகளுடனேயே நாட்டை நிர்வகித்து வருகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, பல வருடங்களாக அதனுடைய தான்தோன்றித்தனமான, ஒழுங்கற்ற பொருளாதார அணுகுமுறை காரணமாக, ஒருசில இறுக்கமான தீர்க்கமான வெளிநாட்டு முதலீட்டாளர்களைத் தவிர ஏனையோர் மனக் கிலேசமடைந்து பர்மாவை விட்டு வெளியேறிவிட்டனர்.

பர்மியத் தலைவர்கள் சோதிடர்களிடமிருந்தே தமது அறிவுரைகளைப் பெறுபவர்கள் எனக் கூறப்படுகிறது. 1980களில் ஒரு கட்டத்தில் எழுந்தமானமாக முழு நாணய முறைமையையும் திருத்தியமைத்தனர்.

உறுதியான நிலைப்பாடுடைய முதலீட்டாளர்களில் வான்கூவரைத் தளமாகக் கொண்ட Ivanhoe Mines Ltd என்ற கனடிய நிறுவனமும் ஒன்றாகும். ஆனால் 2007இல் சர்வாதிகாரம் மிகவும் கீழ்த்தரமான போது, அவர்களும் எதிர்ப்புக் குரல் எழுப்ப நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

அந்தச் சமயத்தில்தான் ஏற்கெனவே பர்மாவுக்கெதிராக இருந்த தடைகளை கனடாவின் ஸ்ரீபன் கார்பரின் கொன்சவேர்டிக் அரசாங்கம் மேலும் இறுக்கமாக்கியதுடன், தன்னுடையதுதான் உலகிலேயே மிகவும் இறுக்கமானது என்று தம்பட்டம் அடித்துக் கொண்டது.

ஆனால் வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தேவையான இரண்டு விடயங்கள் பர்மாவிடம் உள்ளன ஒன்று, கடும் உழைப்பை நல்கக்கூடிய, உழைப்பதில் ஆர்வமுள்ள, மிகவும் வறுமையான மக்கள். மற்றது, செழிப்பான இயற்கை வளங்கள் - அவை எண்ணெயில் இருந்து தங்கம், தங்ஸ்ரன், மரம், செம்பு வரையிலானவையாகும்.

சீனா ஏற்கெனவே தனது நாட்டிலும் மலிவான உழைப்புச் சக்தியைக் கொண்டு பல தொழிற்சாலைகளை அங்கு அமைத்து முன்னிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...

# தமிழக மீனவர்கள் பிரச்சினை மற்றும் இலங்கையில் சீன ஆதிக்கம் என்பன குறித்து முன்னாள் வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் தெரிவித்த கருத்துக்கள்!

**"விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக்கு உதவி செய்து, தற்போது இந்தியாவுக்குத் தெற்கேயும் சீனா வலுவாகக் காலூன்றி இருப்பது நமக்குப் பெரிய ஆபத்தாயிற்றே?"**

"இந்தியாவைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் பாதுகாப்புத் துறையும் வெளியுறவு அமைச்சகமும் 24 மணி நேரமும் உன்னிப்பாகக் கவனிக்கின்றன. இலங்கையின் வட பகுதிகளான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு முதன்முதலாகச் சென்று வந்த வெளியுறவுச் செயலர் என்ற வகையில் சொல்கிறேன். அங்கே சீனாவின் ஆதிக்கம் இல்லை. சாலை போடுவதில் தொடங்கி வீடு கட்டித் தருவது வரை 500 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்றம் ஆகியவற்றை இந்தியாவே செய்து கொண்டிருக்கிறது.

**"வெளியுறவுத்துறைச் செயலராக இலங்கை சென்று தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தினீர்கள். ஆனால், இன்னமும் மீனவர்கள் மீதான தாக்குதலை இலங்கைக் கடற்படை நிறுத்தவில்லையே?"**

"தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவது துரதிஸ்டவசமானது. 2009 – 10 காலகட்டத்தில் இலங்கை அதிபர் ராஜபக்ஸே, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஸே, வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், வெளியுறவுச் செயலர் சி.ஆர். ஜெயசிங்க உள்ளிட்டோருடன் பல கட்டப் பேச்சுவார்த்தை நடத்தினோம். 'இந்தியக் கடல் எல்லையில் இருந்து சர்வதேசக் கடல் எல்லை மிகவும் அருகில் 18 நாட்டிக்கல் மைல் தொலைவில் அமைந்திருப்பதே தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதற்குக் காரணமாக இருக்கிறது. அதற்காகச் சட்டப்படி வழக்குகளைப் பதியலாம். எக்காரணம் கொண்டும் தாக்கக் கூடாது' என்று இந்திய அரசின் சார்பாகவும், 'இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் இரட்டை மடிப்பு வலை, விசைப்படகுகள் ஆகியவை இலங்கையின் வட பகுதியில் நாட்டுப் படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் பெரும்பாலான தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கிறது என்பதோடு இலங்கையின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகவும்

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...

# யாழ்.பல்கலைக்கழகத்தை மூட வைக்க முயல்பவர்களும், வளர்க்க முனைபவர்களும்!



**2012** டிசம்பர் 19ஆம் திகதி நடைபெற்ற இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவைக் கூட்டத்தின் போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கென விடுதிகள் அமைப்பதற்கும், கிளிநொச்சியில் பொறியியல் பீடம் அமைப்பதற்கும், உயர் கல்வி அமைச்சர் எஸ்.பீ. திசாநாயக்க முன்வைத்த பரிந்துரைகளை, அமைச்சரவை ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளது.

அதன்படி, யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் ஆண் – பெண் மாணவர்களுக்கு தலா 400 படுக்கைகள் கொண்ட (மொத்தம் – 800) மாணவர் தங்கும் விடுதிகள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. இதற்கான செலவான 654.4 மில்லியன் ரூபாவுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதுதவிர, கிளிநொச்சி அறிவியல் நகரில் யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கு (Engineering Faculty) கட்டிடங்கள் அமைப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கான செலவு 2,437 மில்லியன் ரூபாவாகும். இந்த பொறியியல் பீடம் ஏற்கெனவே அங்கு அமைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்துடன் இணைப்பைக் கொண்டு செயற்படும்.

இந்த பொறியியல் பீடத்தில் சிவில் எந்திரவியல், எலெக்றிக்கல் மற்றும் எலெக்ரோனிக் எந்திரவியல், கம்யூட்டர் எந்திரவியல் மற்றும் உள் ஒழுக்காற்றுக் கற்கைகள் (Inter – Dicipilinary Studies) ஆகிய துறைகள் அமைந்திருக்கும்.

அமைச்சரவையின் இந்தத் தீர்மானங்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு கற்கை நெறிகளை தற்போது மேற்கொண்டிருக்கும் சுமார் 6,000 மாணவர்களுக்கு மட்டுமின்றி, முழுத் தமிழ் மக்களுக்கும் மிகவும் நன்மை பயக்கும் தீர்மானங்களாகும்.

ஆனால், சமீபத்தில் புலிகளின் 'மாவீரர் தின'த்தையொட்டி, யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சிலரைத் தூண்டிவிட்டு, அவர்களைத் துன்பத்துக்குள்ளாக்கி, அவர்களது படிப்பையும் நாசமாக்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அதைத் தொடர்ந்து தமிழ் மாணவர்கள் மீது அடக்குமுறை கையாளப்படுகிறது என ஒப்பாரி வைக்கும் புலம்பெயர் புலி சார்பு ஊடகங்களும், யாழ்.பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்து வாய் திறக்காதது மட்டுமின்றி, இருட்டிடப்பும் செய்து வருகின்றன.

1975இல் அப்போதைய சிறீலங்கா சுதந்திரக் கட்சி

தலைமையிலான அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க முயற்சித்த போது, அதைத் தடுப்பதற்கு அப்போது தமிழ் மக்களுக்குத் தலைமைதாங்கிக் கொண்டிருந்த எஸ்.ஜே.வி.செல்வநாயம், அ.அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி பெரும் பிரயத்தனம் மேற்கொண்ட இழிசெயலை, இன்றைய தலைமுறையினர் பலர் அறியாமல் இருக்கலாம். பல்கலைக்கழகத்தைத் திறக்க வந்த அப்போதைய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவுக்கு எதிராகக் ஹர்த்தால் நடத்துவதற்கும் கூட்டணி அழைப்பு விடுத்ததும், யாழ்ப்பாண மக்கள் அதை நிராகரித்ததும் வரலாறு.

அதுமட்டுமல்லாமல், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், பல்கலைக்கழகச் சூழலில் வாழும் மக்களுக்கும் இடையில் ஆரம்ப காலங்களில் எழுந்த சில சிறிய தகராறுகளைக்கூட பெரிதுபடுத்தி, அவர்கள் மத்தியில் மோதல்களை உருவாக்கி, பல்கலைக்கழகத்தை மூட வைத்த கைங்கரியத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உள்ளூர் ஆதரவாளர்கள் செய்து வந்திருக்கின்றனர்.

பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொடர்ச்சியாக உருவான புலிகள், யாழ்.பல்கலைக்கழகத்தைத் தமது பிரச்சாரக் களமாக்கி, மாணவர்களின் படிப்பை தொடர்ச்சியாக நாசமாக்கி வந்தனர். அதை எதிர்த்தவர்களை – மருத்துவ பீட பேராசிரியை ராஜினி திராணகம உட்பட, பல மாணவர்களையும், பாதுகாப்புத்துறை ஊழியர்களையும் புலிகள் படுகொலை செய்தபோது, இந்தத் தமிழ் தலைமைகளோ, புலம்பெயர் புலிசார்பு ஊடகங்களோ கண்டித்து ஒரு வசனம் சொன்னது கிடையாது.

அண்மையில் கூட, 'மாவீரர் தின'த்தன்று, தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தான் நடாத்தும் 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் மற்றும் படப்பிடிப்புக் கருவிகள் சகிதம் நேரடியாகவே பல்கலைக்கழகத்துக்குச் சென்று, மாணவர்களைத் தூண்டிவிட்டு இராணுவத்துடன் மோதலில் ஈடுபட வைப்பதற்கு முயன்றுள்ளார். இந்த தமிழ் இனவாத சக்திகள் அரசியல் அனுபவம் அற்ற மாணவர்களைத் தூண்டிவிட்டு, நாட்டில் மீண்டும் இரத்தக்களரி ஏற்படுத்துவதற்கு முயல்வதையே, சரவணபவன் போன்றவர்களின் செய்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

சரவணபவனின் இந்த நாசகாரச் செயலைக் கண்டித்திருக்க வேண்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை, அதற்குப் பதிலாக அதை ஒரு பிரச்சார இயக்கமாக்கி, மாணவர்களை மேலும் உசுப்பேத்தி விடும் கைங்கரியத்தையே செய்து வருகிறது. எனவே இவர்களுடைய அழிவுகரமான அரசியல் செயல்பாடுகள் குறித்து, மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும், தமிழ் சமூகத்தின் கல்வியில் அக்கறை கொண்டவர்களும் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் உருவானபோது அதைத் தடுக்க முயன்று தோல்வி கண்டு, பின்னர் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளைக் காலத்துக்காலம் குழப்ப முயன்ற அதே தமிழ் பிற்போக்கு சக்திகள், தொடர்ந்தும் அதே செயற்பாட்டைத் தொடர்வதையே தற்போதைய சம்பவங்களும் மீண்டுமொருமுறை எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வளவு நடைபெற்றும்கூட, யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்தை உருவாக்கிய சிறீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஆட்சிக் காலங்களில்தான், தொடர்ந்தும் யாழ்.பல்கலைக்கழகம் மேலும் பல வளர்ச்சிகளைக் கண்டு வந்திருக்கிறது என்பதை, தற்போதைய அமைச்சரவைத் தீர்மானமும் நிரூபிக்கிறது.

**– வி.நடராசா – யாழ்ப்பாணம்**

---

9ம் பக்கத்தொடர்ச்சி….

சீனர்கள் பர்மாவின் வளங்களைப் பெறுவதற்கு ஆவலாக இருக்கின்றனர். அதேபோலத்தான் அருகிலுள்ள தாய்லாந்தும்.

புவியியல்ரீதியாக சீனாவுக்கும், அதேபோல வளர்ச்சி அடைந்து வரும் இந்தியாவுக்கும் இடையில் பர்மா அமைந்திருப்பது அதற்கு அனுகூலமாக உள்ளது.

சூ கீ உட்பட பர்மாவின் ஜனநாயகச் செயற்பாட்டாளர்கள் பர்மாவுக்கெதிரான தடைகளை மேற்கு நாடுகள் வெகு விரைவாக நீக்குவதையிட்டு எச்சரிக்கை செய்துள்ளனர். இராணுவம் தன்னை வீட்டுக் காவலில் இருந்து விடுதலை செய்வதற்கு எடுத்த முடிவை அவர் அவதானத்துடன்தான் வரவேற்றுள்ளார். ஆனால் 664 ஆசனங்கள் கொண்ட இறப்பர் முத்திரை (Rubber Stamp) போன்ற சட்டசபையில் 45 இடங்களுக்கு மட்டும் நடைபெறும் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவரையும், அவரது தேசிய லீக்கையும் அனுமதித்துள்ளனர்.

எது எவ்வாறாயினும் பர்மா மீதான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டிய அழுத்தம் மேற்குலக நாடுகள் மேல் அதிகரித்துக் கொண்டு செல்கிறது.

எதிர்காலத்தில் பர்மா ஜனநாயக வழிக்குத் திரும்புமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயமெனினும், எனக்கு அதில் சந்தேகம்தான்.

ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது, மேற்குலக நாடுகள் விரைவில் தங்களது வியாபாரத்துக்கு வழி திறந்து கொள்வதற்காக அதை ஒரு ஜனநாயக நாடாக முத்திரை குத்துவார்கள். அவ்வாறு நிகழும் பட்சத்தில், கனடிய வர்த்தக நிறுவனங்கள் அதன் பயனை அறுவடை செய்ய வேண்டும் என்பதில், காபரின் கொன்சவேர்டிக் கட்சியினர் மிக உறுதி கொண்டுள்ளனர்.

**மொழிபெயர்ப்பு: சாமி** நன்றி: Toronto Star

# கொண்டாடப்படும் 'மாவீரர்'களும் மறக்கப்பட்டுவிட்ட மக்களும்!



வருடா வருடம் நொவெம்பர் 27ம் தேதியை விடுதலை புலிகள் தமது மரணித்த போராளிகளின் நினைவு நாளாக, 'மாவீரர்' தினமாகக் கொண்டாடி வந்தனர். சிறீலங்கா அரசு 2009 மே 18ம் திகதியுடன் புலிகளை முழுதாக அழித்த பின்னரும்கூட, உலகம் முழுவதுமுள்ள புலி ஆதரவாளர்கள் அத்தினத்தை சற்று வீரியம் குறைந்த போதிலும் மாவீரர் தினமாகக் கொண்டாடியே வருகின்றனர்.

இதில் ஒரு சுவாரசியமான விடயமென்னவெனில், ஒரு தலைவன், அதாவது புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது பிறந்த தினத்தையே, தனது படை வீரர்கள் இறந்த நினைவு தினமாக அறிவித்து அதை முழுத் தமிழ் இனத்தையும் கொண்டாட வைத்திருப்பதுதான்! இத்தகைய அதி மேதாவித்தனமான (அல்லது குரூரத்தனமான) தலைவன் பிரபாகரனைத் தவிர உலகில் வேறெவரும் இருக்க முடியாது. (ஹிட்லர் கூட இவ்வாறு செய்ததாகத் தகவல் இல்லை)

பிரபாகரனின் பிறந்த தினத்தை போராட்டத்தில் இந்தவர்களது நினைவு தினமாகக் கொண்டாடும் அவலத்தை மாற்றுவதானால் ஒரேயோரு வழி மட்டுமே உண்டு. இறுதிப் போரின் போது இராணுவத்தினரால் (சரணடைந்த பின்?) பிரபாகரன் கொலை செய்யப்பட்டுவிட்டார் என்பது பல வழிகளிலும் நிரூபிக்கப்பட்டுவிட்ட போதிலும், அவர் உயிருடன் இருக்கிறார் என்றும், அவர் விரைவில் திடீரென்று வெளிப்பட்டு தமிழீழப் போராட்டத்தை மீண்டும் நடாத்தி வெற்றி வாகை சூடுவார் என்றும் அவரது போலிப் புலிகள் தமது சொந்த வருமானத் தேவைகளுக்காகப் பிரச்சாரம் செய்வதைக் கைவிட்டு, அவரது மரணத்தை ஏற்றுக் கொண்டு, அவரது மரண தினத்தை மாவீரர் தினமாகப் பிரகடனம் செய்தால்தான் நடக்கும். அவரது தொண்டர்கள் தமது தலைவனுக்காக இந்தச் செயலைச் செய்வார்களா?

சரி, புலிகளின் மாவீரர் என்போர் யார்? சீனத் தலைவர் மாஓ ஒருமுறை சொன்னார்: ''மக்களுக்காக இறப்பவர்கள் மலையை விடப் பாரியவர்கள், பிற்போக்குவாதிகளுக்காக இறப்பவர்கள் இறகை விட இலேசானவர்கள்'' என்று. அப்படிப் பார்த்தால் புலிகளின் மாவீரர்கள் யார்? இராணுவத்துடனான சண்டையில் இறந்தவர்கள், சகோதர இயக்கங்களுடனான மோதலில் இறந்தவர்கள். இவர்களில் சிலர் தமது இராணுவக் கடமைகளில் ஒன்றாக பொதுமக்களைக் கொன்றவர்களாகவும் இருப்பர்!

புலிகளின் தலைமை இதுவரை தமது மரணித்த உறுப்பினர்களை மட்டுமே மாவீரர்களாகக் கணித்து நினைவுகூர்ந்து வந்தனர். இலங்கை அரச இராணுவத்துடான மோதலில் இறந்த அனைத்து இயக்கப் போராளிகளையும் மாவீரர்களாக ஏற்றுக்கொண்டு, அந்தத் தினத்தை நினைவுகூர வேண்டும் என மாற்று இயக்கங்கள் சிலவும், சில தமிழ் 'அரசியல் ஞானி'களும் புலிகளிடம் இரந்தும் அவர்கள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. ஆனால் புலிகள் அழிந்து போன பின்னர் கடந்த இரண்டொரு வருடங்களாக தமது மரணித்த போராளிகளையும் புலிகளின் மாவீரர்கள் தினத்தில் சேர்த்து 'துணிகரமாக' சில மாற்று இயக்கங்கள் நினைவுகூர ஆரம்பித்துள்ளன. வாழ்க அவர்களது 'வீரம்' (துரோகம்?)!

ஆக இப்பொழுது அரசுக்கெதிராகப் போராடுவதற்கு என ஆரம்பித்து, பின்னர் மக்களுக்கு எதிராகச் செயற்பட்ட அனைத்து இயக்கங்களும் தமது உறுப்பினர்களையும், பாசிசப் புலிகளுக்காக உயிரிழந்த உறுப்பினர்களையும் (மன்னிக்கவும், சந்தர்ப்பவசத்தால் புலிகளுக்குத் தீனியாக்கப்பட்ட இந்த அப்பாவி இளைஞர்கள்) ஒரே தினத்தில் கொண்டாடும் தமிழ் தேசிய சமரசத்துக்கு (அது எல்லாவற்றையும் விட வலிமையானது) வந்துவிட்டனர்.

*முல்லை ஈஸ்வரன்*

சரி அவர்கள் நீண்ட காலமாகக் கோரி வந்த தமிழ் தேசிய ஒற்றுமை புலித் தலைமையின் மரணக்குழிகளின் மீதாவது ஒப்பேறட்டும். வாழ்த்துவோம்!

இப்பொழுது கேள்வி என்னவென்றால், இலங்கை – இந்திய இராணுவங்களாலும், புலிகளைப் பிரதானமாகக் கொண்ட தமிழீழ இராணுவங்களாலும் அநியாயமாக மரணிக்க வைக்கப்பட்ட சாதாரண ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் – சிங்கள – முஸ்லீம் மக்களின் மரணங்களை யார் நினைவு கூருவது? அவர்களை எத்தினத்தில் நிவைு கூருவது? இந்த நடவடிக்கையை யார் முன்னெடுப்பது? முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களின் போது மரணித்த இனந்தெரியாத இராணுவ வீரர்களுக்கும் மக்களுக்கும் கூட பல நாடுகளில் நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், நினைவு தினங்களும் வகுக்கப்பட்டுள்ளன. அப்படியிருக்கையில், நாம் வாழ்ந்த

காலத்தில், எமது கண் முன்னால் அரச இராணுவங்களாலும், இயக்க இராணுவங்களினாலும் கொல்லப்பட்ட மக்களை நாம் நினைவுகூர வேண்டாமா?

அரச இராணுவங்கள் 'தேசிய வீரர்கள்' தினங்களையும், இயக்க இராணுவங்கள் 'மாவீரர்கள், வீர மக்கள் தின'ங்களையும் கொண்டாடட்டும். மக்களாகிய நாமும் போரில் மரணித்த எமது பொதுமக்களுக்காக ஒரு தினத்தை தேர்ந்தெடுப்பது அவசியம் அல்லவா? இனியும் அசட்டையாக இருக்காமல் அடுத்த ஆண்டே நாம் இதைச் செயற்படுத்த வேண்டும்.

எத்தினம் 'பொதுமக்கள் தினம்' என்பதை எப்படித் தீர்மானிப்பது என்பதை, ஏதாவது ஒரு வெகுஜன ஊடகத்தின் ஊடாக எமது மக்கள் மத்தியில் நடாத்தும் அபிப்பிராயக் கணிப்பின் மூலம் தெரிவு செய்யலாம். அப்பொழுது வேண்டுமானால் யாழ்ப்பாண மக்களின் மிகுந்த அபிமானத்தைப் பெற்றிருந்த முன்னாள் யாழ்.மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா அவர்களை புலிகள் படுகொலை செய்து, தமிழ் சமூகத்தின் முதலாவது பொதுமகன் கொலையை, அரசியல் கொலையை உலகறியச் செய்த அவரது தினத்தை நினைகூரும் வகையில்(1975 யூலை 27ம) அத்தினத்தை அமைக்க வேண்டும் என ஏற்கெனவே சிலர் முன்வைத்துள்ள கருத்தையும் பரிசீலனை செய்யலாம்.
*

9ம் பக்கத்தொடர்ச்சி...

இருக்கிறது' என்ற இலங்கை அரசின் வாதத்தை முன்வைத்தும் பேச்சுவார்த்தை நடத்தினோம். ஆனால், ஒரு முடிவுக்கு வராமலேயே அந்தப் பேச்சுவார்த்தை பாதியில் நின்றுவிட்டது. தமிழக மீனவர்களின் சிக்கல்களையும் இலங்கை மீனவர்களின் சிக்கல்களையும் தெளிவாகப் புரிந்துகொண்டு, இருநாட்டு அரசாங்கங்களும் மீனவ அமைப்புகளுடன் பேசி, ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வடிவமைத்துக் கையெழுத்திட்டால்தான் தீர்வு காண முடியும். இப்போது போர் முடிந்து இலங்கையில் அமைதி நிலவுவதால், அதற்கான சாத்தியங்கள் அதிகம்"

(இந்தியாவின் மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரும், அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவராகத் தற்போது பணியாற்றி வருபவருமான திருமதி நிருபமா ராவ் அண்மையில் பெங்களூர் நகருக்கு வந்திருந்தபோது, 'ஆனந்தவிகடன்' வார இதழுக்கு வழங்கிய பேட்டியொன்றின் சில பகுதிகளே மேலே தரப்பட்டுள்ளன. நிருபமா ராவ் முன்னர் இலங்கைக்கான இந்தியத் தூதுவராகப் பணியாற்றியர் என்பதுடன், பின்னர் இந்தியாவின் வெளியுறவுச் செயலாகராகவும் பணி புரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. உலகின் ஆற்றல்மிக்க 100 பெண்கள் பட்டியலிலும் நிருபமா இடம் பிடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது)
*

முன்பக்கத்தொடர்ச்சி.....

செயற்பாடுகள் இலங்கையில் மிகப்பெரிய அளவில் அதிகரிக்கத் தொடங்கின.

ஆனால் தற்பொழுது வடக்கில் நடைபெறும் சம்பவங்களே மிகப்பெரிய அளவில் உள்நாட்டில் மட்டுமின்றி, சர்வதேச அரங்கிலும் புலி சார்பு ஊடகங்களால் பெரிதுபடுத்திப் பிரச்சாரம் செய்யப்படுகின்றன. உண்மையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது உண்மை என்ற போதிலும், அதற்கான காரணங்களை இந்த ஊடகங்கள் திட்டமிட்டுத் திரிபுபடுத்திப் பிரச்சாரம் செய்கின்றன. வடக்கில் பெருமளவு இராணுவப் பிரசன்னம் இருப்பதால், இந்தவாறான குற்றச் செயல்களுக்கும் இராணுவத்துக்கும் தொடர்பு உள்ளது போன்றதொரு மாயையை இவை உருவாக்குகின்றன. அல்லது அரசுடன் இணைந்திருக்கும், இவர்களால் 'ஒட்டுக்குழு' என வர்ணிக்கப்படும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மீது பழியைப் போட முயல்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகைகூட இவ்வாறான செய்திகளை வெளியிடும் போது, நாசூக்காக செய்தியின் முடிவில் 'சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு 50 மீட்டர் தூரத்தில் இராணுவக் காவலரண் ஒன்று அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது' எனச் செய்தி வெளியிடுவது ஒரு வழமை. அதற்காக இராணுவம் தூய்மையான அப்பாவிகள் என வாதிடுவது அல்ல எமது நோக்கம்.

தற்பொழுது வடக்கில் நடைபெறும் குற்றச் செயல்களை வைத்துக்கொண்டு தமிழ் தேசியவாதிகளின் பிரதான கூடாரமான தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும், புலிகளின் வாரிசுகள் எனத் தம்மைச் சொல்லிக் கொள்ளும் சில தீவிர தமிழ் இனவாத உதிரிக் கட்சிகளும் (மனோ கணேசன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள்), தமிழ் மக்களின் பாதுகாவலர்களான புலிகள் அழிக்கப்பட்ட பின்னர்தான் தமிழ் பகுதிகளில் இவ்வாறான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன எனப் பிரச்சாரம் செய்கின்றன. இதே கருத்தையே புலம்பெயர் புலி சார்பு ஊடகங்களும் திருப்பிக் கூறுகின்றன. அத்துடன் அரசாங்கம் திட்டமிட்டே இவ்வாறான செயல்களை வடக்கில் உருவாக்கித் தமிழ் இனத்தை சீரழிக்க முயல்கின்றது என்றும் பிரச்சாரம் செய்கின்றன.

இந்தப் பிரச்சாரம் இரண்டு அடிப்படைகளைக் கொண்டது. ஒன்று, தமிழினம் உலகிலேயே பரிசுத்தமான, மிகவும் தூய்மையான ஓர் இனம்.

அதனிடம் உள்ளதெல்லாம் நூற்றுக்கு நூறு வீதம் நல்ல விடயங்கள் மட்டுமே. அவர்களிடம் ஏதாவது தீய விடயங்கள் காணப்படுமாயின் அவை வெளிச் சக்திகளால் திணிக்கப்பட்டவையே. திராவிட வாரிசுகளின் மொழியில் கூறுவதானால், அவையெல்லாம் ஆரிய வந்தேறு குடிகளால் திணிப்பட்டவை. இது ஒரு காரணம்.

இரண்டாவது விடயம், யாழ்ப்பாண வேளாள மேட்டுக்குடியினரின் 'ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பதில் தவறென்ன?' என்ற கேள்விக்கும் ஏக்கத்துக்கும் செயல் வடிவம் கொடுக்க வந்த புலிகளை மீளவும் புனருருவாக்கம் செய்வதற்கு, அவர்கள் இல்லாத தமிழ் சமூகம் 'படும்பாட்டை'ப் பற்றிப் பிரச்சாரம் செய்வதும் அவர்களது நோக்கமாகும்.

ஆனால் இங்கு ஒரு கேள்வி எழுகின்றது. அதாவது, யாழ்ப்பாணம் உள்ளடங்கியிருக்கும் வட மாகாணத்தைத் தவிர்த்து கிழக்கு மாகாணத்திலும் கணிசமான தமிழர்கள் வாழ்கின்றார்கள். யாழ்ப்பாணத்தவர்கள் வசதியான வாழ்க்கை தேடி வெளிநாடுகளுக்கு ஓடிப்போன அளவுக்கு கிழக்கு மாகாணத்தவர்கள் ஓடிப் போகவில்லை. இன்னும் சொல்லப்போனால் அவர்கள்தான் 'தமிழ் மண்'ணைப் பாதுகாத்து, சொந்த மண்ணில் வாழ்பவர்கள். அவர்களது பிரதான நகரங்களான மட்டக்களப்பு, திரிகோணமலை, அம்பாறையின் தமிழ் பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் நிகழ்வது போன்ற குற்றச் செயல்கள், சமூகச் சீர்கேடுகள் ஏன் பெரிய அளவில் நடைபெறவில்லை?

உண்மையான காரணங்களை இலங்கையில் இருக்கும் சில சமூக ஆய்வாளர்களும், வெளிநாடுகளிலிருந்து இலங்கை (குறிப்பாக வடக்கு கிழக்கிற்கு) சென்று வந்த ஆய்வாளர்களும் சில ஊடகங்கள் வாயிலாக முன்வைத்திருக்கிறார்கள். அவர்கள் வந்தடைந்த முடிவுகளைப் பார்க்கும் போது இந்தக் குற்றச் செயல்களின் பின்னணியை ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது.

முதலாவது விடயம், புலிகளின் காலத்தில் இந்த அளவுக்கு மக்கள் மத்தியில் குற்றச் செயல்கள் நடைபெறவில்லை என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க விடயம்தான். அதற்கொரு காரணம் தமிழ் மக்களுக்கு இன்று கிடைத்திருக்கும் சுதந்திரமும், வசதிகளும் புலிகளின் அடக்குமுறை ஆட்சியின் கீழ் இல்லாமல் இருந்ததுதான்.

இன்று புலிகள் அழிந்த பின்னர் தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கும் கேட்பார் யாருமற்ற சுதந்திரமான வாழ்க்கை அன்று இருக்கவில்லை. மக்களிடம் அடிப்படைத் தேவைகளுக்கே போதிய பணம் இருக்கவில்லை. மக்கள் தமது வீடுகளில் நிம்மதியாக இருக்க முடியாமல் அவர்களை யுத்தம் அங்கும் இங்குமாகத் துரத்திக் கொண்டிருந்தது. 'பிள்ளை பிடிகாரர்களான' புலிகளிடமிருந்து தமது பிள்ளைகளைப் பாதுகாக்க மக்கள் அல்லும் பகலும் போராட வேண்டியிருந்தது.

இன்று கிடைத்திருப்பது போல எந்த நேரத்திலும் நாடு முழுவதும் சுற்றித்திரியக்கூடிய போக்குவரத்து வசதிகளோ, மின்சார வசதியோ, வீட்டுக்கு ஒரு ஆட்டோவோ அல்லது பல மோட்டார் சைக்கிள்களோ, தொலைக்காட்சி பார்க்கும் வசதியோ, குளிர்சாதனப் பெட்டியோ, ஆளுக்கொரு கைத்தொலைபேசியோ அல்லது வீட்டுத் தொலைபேசியோ, வெளிநாட்டு உறவினர் வருகையோ, கோவில் திருவிழாக்களோ, விளையாட்டுப் போட்டிகளோ, களியாட்ட விழாக்களோ, உத்தியோக வாய்ப்புகளோ, இது போன்ற இன்னும் எண்ணற்ற வசதிகளோ புலிகளின் காலத்தில் இருக்கவில்லை.

இவையெல்லாம் இலங்கையின் ஏனைய பாகங்களில் ஏற்கெனவே இருந்தும், அங்கு இல்லாத அளவில் யாழ்ப்பாணத்தில் மட்டும் சீரழிவுகள் ஏற்பட்டுள்ளதென்றால், அதற்குக் காரணம் 'கண்டறியாததைக் கண்டதும்' வரும் ஒரு வேகமான ஆகர்சிப்புத்தான். குறிப்பாக இந்த 30 வருடப் போர் நடைபெற்ற காலத்தில் பிறந்த ஒரு குழந்தை, இப்பொழுது 30 வயதிலிருந்து 13 வரையிலான இளம் பருவத்தினராக இருப்பார்கள். அவர்களுக்கு முன்பு இந்தவாறான வாழ்க்கை வசதிகள் கிடைத்திருக்க வாய்ப்பிருந்திருக்காது. இப்பொழுது அது கிடைத்து நெறிப்படுத்தலும் இல்லையென்றால், அவர்கள் கட்டறுந்த காளைகளாகத்தான் செயற்படுவார்கள்.

இன்னொரு காரணி, மற்றைய பிரதேசங்களில் உள்ள தமிழ் மக்களுக்குக் கிடைக்காத அளவுக்கு யாழ்ப்பாணத்தவர்களுக்குக் கிடைத்து வரும் வெளிநாட்டுப் பணம். யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் குறைந்தபட்சம் ஒருவராவது வெளிநாடுகளில் இருக்கிறார்கள். இவர்கள் இடையிடையே தன்னும் தமது உறவுகளுக்கு அனுப்பும் பணம் தாய்நாட்டில் இருப்பவர்களின் நுகர்வுக் கலாச்சாரத்துக்கு கணிசமான அளது தீனி போடுகின்றது.

ஒரு புள்ளிவிபரத்தின்படி சென்ற ஆண்டு சுமார் 55,000 பேர் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குச் (கணிசமானோர் வட பகுதித் தமிழர்கள்) சென்று வந்துள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது

5,000 டொலர்களை இலங்கையில் செலவிட்டிருந்தால், அந்தப் பணம் வடக்குத் தமிழர்களின் பணப் புழக்கத்தில் எத்தகைய தாக்கத்தை உண்டுபண்ணியிருக்கும்?

இதுதவிர, வீடு கட்டுவதற்கு, விவசாயம் செய்வதற்கு, மீன பிடிப்பதற்கு, தொழில் தொடங்குவதற்கு என பல வகையான பண உதவிகள் இலங்கை அரசாங்கத்தாலும், வெளிநாடுகளாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும் யாழ்ப்பாணத்துக்கு வாரியிறைக்கட்டுள்ளன. இதற்காகவே இலங்கையின் அனைத்து வங்கிகளும் வட பகுதியில் கிளைகளைத் திறந்து வைத்திருக்கின்றன. ஒரு சாதாரண தொழிலாளியின் நாளாந்தக் கூலியே 1000 ரூபாய்களுக்கு மேல் உள்ளது என்பதும், அந்தக் கூலியில் கூட விரும்பிய நேரத்தில் ஒரு தொழிலாளியைப் பிடிப்பது அரிது என்னும் போது, அங்குள்ள நிலைமையப் புரிந்து கொள்ள முடியும். இந்த நிலைமையும் அங்கு பணப் புழக்கம் அதிகரிப்பதற்கு ஒரு காரணியாகும்.

இவையெல்லாவற்றின் மூலமும் தமிழ் மக்களின் பொருளாதார வாழ்வு அடிப்படையில் ஏற்றம் கண்டுள்ளது எனச் சொல்ல முடியாது என்ற போதிலும், மக்களுக்குக் கிடைத்த சுதந்திரமும் திடீரென ஏற்பட்ட அதீதமான பணப் புழக்கமும், அவர்கள் மத்தியில் உழைப்பின் அவசியத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுள்ளதுடன், நுகர்வுக் கலாச்சாரத்தை முன்னுக்குக் கொண்டு வந்துள்ளது என்பதுதான் உண்மை.

ஒரு வேடிக்கையான விடயம் என்னவெனில், அண்மைக் காலங்களில் தாயகம் சென்று வரும் புலம்பெயர் தமிழர்கள் பலர், வெளிநாடுகளில் வாழும் தம்மைவிட, இலங்கையில் வாழும் தமது உறவுகள் வசதியாகவும், சந்தோசமாகவும் வாழுகிறார்கள்' எனப் புலம்புவதுதான். கனடாவில் இயங்கும் தமிழ் வானொலி ஒன்று, ஒருமுறை தனது நேயர்களிடம் இது சம்பந்தமாகக் கருத்துக் கேட்டபோது, தாயகம் சென்று வந்த அநேகமானோர் இலங்கையில் உள்ளவர்களுக்கு இனிமேல் பணம் அனுப்பத் தேவையில்லை, அவர்கள் எம்மைவிட வசதியாக வாழ்கிறார்கள் எனக் கருத்துக் கூறியிருந்தார்கள்.

இவ்வாறான கருத்துக்கள் பொதுமையானவை அல்லவென்ற போதிலும், அங்குள்ள நிலைமையின் தாற்பரியத்தை இவையும் ஒரு கோணத்தில் விளக்குகின்றன. எனவே யாழ்ப்பாணத்தில் இன்று ஏற்பட்டிருக்கும் குற்றச் செயல்கள், கலாச்சாரச் சீரழிவுகளின் அதிகரிப்புக்கு மற்றவர்களைக் குறை கூறுவதை விடுத்து, எம்மிடம் உள்ள குறைகளைக் களைய முயற்சிக்க வேண்டும். நுகர்வுக் கலாச்சாரத்தின் கட்டுக்கடங்காத வளர்ச்சியே எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ளது. அந்த எதிர்மறையான வளர்ச்சியை ஏற்படுத்திவிட்டதில், வர்த்தக நிறுவனங்கள், வெளிநாட்டு சக்திகள் என்போருடன், புலம்பெயர் தமிழர்களுக்கும் பெரும் பங்கு உண்டு.

தமிழ் மக்களின் புலமைசார் சமூகமும், சமூகப் பொறுப்புள்ள ஸ்தாபனங்களும் கடுமையாக முயற்சிப்பதின் மூலமே இந்த நிலைமைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். இந்த விடயத்தில் அரச எந்திரத்தினதும், சட்டத்தைப் பேணுபவர்களினதும் பங்கு என்பது, எமது முயற்சிகளுக்கு அடுத்த கட்டமானது என்பதைப் புரிந்து கொள்வது அவசியம்.

இதற்கொரு உதாரணம் அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் 'மாவீரர் தின'த்தை ஒட்டி நடைபெற்ற சம்பவங்களாகும். அந்த உயரிய நிறுவனத்தில் கற்பிக்கும் சமூகம் சரியாகச் செயற்பட்டிருக்கின், ஆயுதப் படைகள் அங்கு நுழைய வேண்டிய தேவையே வந்திருக்காது. அதைத் தவறவிட்டுவிட்டுப் பின்னர் அனுபவமற்ற மாணவர்களின் பின்னர் இழுபடும் நிலைக்கு அங்குள்ள ஆசிரிய சமூகம் தள்ளப்பட்டது கவலைக்குரியதும், கண்டனத்துக்குரியதுமாகும்.

எனவே, இப்பொழுது வடக்கில் ஏற்பட்டு வரும் சமூகச் சூழ்நிலைகள் 1970களின் ஆரம்பத்தில் இருந்த நிலையை ஒத்ததாக உள்ளது என்ற உண்மையைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அன்று இவ்வாறு ஏற்பட்ட ஒரு சூழல்தான் பின்னர் அழிவுகரமான யுத்தத்துக்கு இட்டுச் சென்றது. அதைத் தடுப்பதில் வடக்கில் உள்ள புலமைசார் சமூகத்துக்கும், மக்கள் நலன் விரும்பிகளுக்கும் முக்கிய பொறுப்புண்டு. இந்தப் பொறுப்பை 'எரிகிற வீட்டில் பிடுங்கிறது லாபம்' எனச் செயற்பட்டு வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்போ, இதர தமிழ் தேசியவாதச் சக்திகளோ அல்லது புலம்பெயர் புலி சார்பு சக்திகளோ செய்வார்கள் என எதிர்பார்க்க முடியாது.

அறிவுடனும், ஆற்றலுடனும், தூர நோக்குடனும் எமது தலைவிதியை நாமே நமது கைகளில் எடுக்க வேண்டும்.. *

ஒருபோதும் கட்சியின் ஒழுக்க விதிகளுக்கு மாறாக நாங்கள் செயல்பட்டதில்லை. உங்கள் காதலியையோ மனைவியையோ கைவிடுங்கள் என்று ஒருவேளை கட்சி கட்டளையிட்டிருந்தால், தயங்காமல் அதையும் செய்திருப்போம். – எரிக் ஹாப்ஸ்பாம்

# எமது இரத்தத்தைக் கொடுத்தேனும் 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பாதுகாப்போம்!

- அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

''பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை சம்பந்தமாக பாராளுமன்றத் தெரிவுக்குழு முடிவுகளுக்கு வருவதற்கு முன்பதாக, அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மற்றும் அக்குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்கள் குறித்து உயர்நீதிமன்றத்தின் மூன்று முன்னாள் நீதியரசர்கள் பரிசீலனை செய்துள்ளதால், நிச்சயமாக அவருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை முன்னேற்றகரமானதாக இருக்கும்''.

இவ்வாறு கூறியிருக்கிறார் கொழும்பிலிருந்து வெளியாகும் 'த ஐலண்ட்' ஆங்கில பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சருமான தோழர் வாசுதேவ நாணயக்கார. மேலும் அவர் தெரிவித்த கருத்துக்களாவது:

''தற்போதைய அரசியல் அமைப்பின் அடிப்படையிலும், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் பிரகாரத்தின் அடிப்படையிலும், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல்களை முன்னெடுத்துச் செல்ல முடியும் என நாம் கருதுகின்றோம். அத்துடன் அரசியல் அமைப்புக்குள்ள அதிகாரங்கள் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில், பாராளுமன்றம் தனக்குள்ள அதிகாரங்களின் அடிப்படையில் சகல விடயங்களிலும் தீர்மானங்களை எடுக்க முடியும். எனவே இந்த அடிப்படையில் பாராளுமன்றத்தின் மேலாதிக்க நிலை என்பது கேள்விக்கு அப்பாற்பட்டது. இதுதான் எங்கள் கட்சியின் நிலைப்பாடாகும்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் எப்பொழுது கவனத்துக்கு வந்தனவோ, அப்பொழுதே அவருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை முன் வைக்கப்பட வேண்டும் என எண்ணினோம். அவருக்கு எதிரான பிரதான மூன்று குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக பாராளுமன்றத் தெரிவுக்குழு நிரூபணங்களை முன்வைத்த நேரத்தில், அவை சம்பந்தமாக பிரதம நீதியரசர் தன்னைத் தற்பாதுகாத்துக் கொள்ளும், விளக்களிக்கும், ஆவணங்களையும் மற்றும் சாட்சியங்களையும் முன்வைக்கும் உரிமை அவருக்கு வழங்கப்பட்டது''.

13ஆவது திருத்தச் சட்டம் குறித்து எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தமது கட்சி நிலைப்பாடு குறித்து அமைச்சர் வாசுதேவ நாணயக்கார பின்வருமாறு கூறினார்:



''மாகாணசபைகள் முறைமையைப் பாதுகாப்பதில் எமது கட்சி பூரண ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்புடனும் உள்ளது. எமது இரத்தத்தைக் கொடுத்தேனும் மாகாணசபை முறைமையைப் பாதுகாப்பதுடன், ஜனநாயக வழி முறைகளினூடாக பூரணமான அதிகாரப் பகிர்வுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

தற்பொழுது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மகிந்த சிந்தனையிலும் திட்டங்களிலும் 13ஆவது திருத்தத்தின் தொடர்ச்சியும், மாகாண சபைகளும் இணைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அவை அங்கீகாரத்துக்காக நாட்டின் முன் வைக்கப்பட்டுள்ளன. எனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புத் திட்டங்களில் 13ஏ என்பது முடிந்து போன, நடைமுறையில் நிறுவப்பட்டுவிட்ட ஒன்றாகும்''.

மேலும் அவர் கூறுகையில்,

''தற்போதய அரசாங்கமானது ஐ.தே.க ஆட்சியையோ அல்லது ஜே.வி.பி பாணியிலான அராஜக ஆட்சியையோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதிக்கம் செலுத்தும் பிரிவினைவாத சிந்தனையுள்ள அரசாங்கத்தையோ எதிர்க்கும் வெவ்வேறு விதமான சக்திகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சக்திகளுக்குள் முரண்பாடுகளும் உள்ளன. அரசியல் மற்றும் பொருளாதார தத்துவார்த்தங்களில் முரண்பாடான சிந்தனைகள் உள்ளன. தேசிய இனப் பிரச்சினை மற்றும் அதிகாரப் பகிர்வு என்பனவற்றிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் முரண்பாடான சிந்தனை உள்ளது. இந்த முரண்பாடுகள் தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருவதுடன், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் உள்ள சக்திகளின் சம நிலையின் அடிப்படையில் குறிப்பிட்ட சில முடிவுகளும் எட்டப்பட்டுள்ளன. இந்த முரண்பாடுகள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொள்கைத் தீர்மானங்களைப் பாதிக்காது.''

என்று தெரிவித்தார். *